## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### 1 தாதிமை இல்லத்திலுள்ள சிறப்பு வாக்களிப்பு நிலையத்தில் யார் வாக்களிக்கலாம்?

வாக்காளர் பதிவேட்டில் இடம்பெற்றிருக்கும் பெயர்கள் கொண்ட வாக்காளர்களும் தாதிமை இல்லங்களின் குடியிருப்பாளர்களும் மட்டுமே அங்கு வாக்களிக்க முடியும். இவ்வாக்காளர்கள் குடிநுழைவு, சோதனைச் சாவடிகள் ஆணையத்தோடு பதிவு செய்யப்பட்ட குடியிருப்பு முகவரியில் தங்கள் வாக்கு அட்டைகளைப் பெறுவார்கள்.

### 2 வாக்காளரின் வாக்கைக் குறிக்க தாதிமை இல்ல ஊழியர்கள் உதவ முடியுமா?

இல்லை. வாக்காளர்  உடற்குறையால் பாதிக்கப்பட்டு வாக்குச் சீட்டில் குறியிட இயலவில்லையென்றால், உதவிக்கு தேர்தல் அதிகாரியை அணுகலாம்.

### 3 வாக்களிப்பு நாளன்று வாக்காளர்கள் தவிர்த்து மற்ற வருகையாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா?

வாக்களிப்பு நாளன்று மேற்கோள்ளும் வருகை ஏற்பாடுகள் பற்றி அறிய, தயவுசெய்து தாதிமை இல்ல ஊழியர்களை அணுகவும்.

### 4 வாக்காளருக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்கே அவரை வாக்களிக்க அவரது குடும்ப உறுப்பினர் அழைத்துச் செல்ல முடியுமா?

இச்சோதனை முயற்சியில் பங்குபெறும் தாதிமை இல்லங்களுக்கு வந்து வாக்களிக்குமாறு வாக்காளர்களை ஊக்குவிக்கின்றோம்.

### 5 வாக்காளரிடம் வாக்கு அட்டை இல்லையென்றால் அவரால் வாக்களிக்க முடியுமா?

வாக்காளரிடம் வாக்கு அட்டை இல்லையென்றால்,  தேர்தல் அதிகாரியை அணுகி உதவி கோரலாம்.

# தாதிமை இல்லங்களில் நடக்கவிருக்கும் 2023 அதிபர் தேர்தலுக்கான வாக்களிப்பு




தேர்தல் துறை தேர்ந்தெடுக்கப்பட்ட தாதிமை இல்லங்களில் வசிக்கும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு, சிறப்பு வாக்களிப்பு நிலையங்களை அமைக்கும். இது அவர்கள் வாக்களிப்பதற்கான வசதியை மேம்படுத்துகிறது.





Follow ELD on Telegram for the latest info.

www.eld.gov.sg
1800-CALL-ELD (1800-225-5353)
11 Novena Rise Singapore 307516

MAJULAH SINGAPURA
ELECTIONS DEPARTMENT SINGAPORE

# தாதிமை இல்லத்திலுள்ள சிறப்பு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல்

## 1 பதிவுக்குத் தயாராகுதல்

அசல் அல்லது மின்னிலக்க அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடப்பிதழ், அதனுடன் வாக்கு அட்டை அல்லது மின்னிலக்க வாக்கு அட்டை ஆகியவற்றை தயாராக வைத்துக்கொள்ளவும்.










## 3 வாக்களித்தல்

X-முத்திரையைப் பயன்படுத்தி வாக்குச் சீட்டில் குறியிடவும்.




## 2 வாக்குச் சீட்டு வழங்குதல்

தேர்தல் அதிகாரி உங்கள் தேர்தல் பிரிவு, வாக்களிப்புத் தொகுதிக்கு உட்பட்ட பிரிவு குறியீடு, வரிசை எண் மற்றும் பெயர் ஆகியவற்றை அழைத்த பின்னர், அவரிடமிருந்து வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.






## 4 வாக்குப் பெட்டியில் வாக்குச் சீட்டைப் போடுங்கள்

வாக்குச் சீட்டை மடித்து, வாக்குப் பெட்டியில் போடுங்கள்.







## ! முக்கிய குறிப்பு

அசல் அல்லது மின்னிலக்க அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடப்பிதழ் இல்லாத வாக்காளர்களால் வாக்களிக்க முடியாது.

# நடமாடும் வாக்களிப்பு நிலையங்கள்

வாக்களிக்கும் நிலையங்களுக்கு நேரில் வந்து வாக்களிக்க முடியாதவர்களுக்கு

## பதிவுக்குத் தயாராகுதல்




தேர்தல் அதிகாரி வாக்காளருக்கு அவரது படுக்கையிலேயே வாக்களிப்பு செயல்முறையை நடத்துவார்.

## பதிவு




வாக்காளர் அவரது அசல் அல்லது மின்னிலக்க அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடப்பிதழ், அதனுடன் வாக்கு அட்டையைத் தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைக்கிறார்.




வாக்களிப்பு அதிகாரி வாக்காளரின் அடையாளத்தை சரிபார்த்துவிட்டு அவரை பதிவுச் செய்வார்.

## வாக்குச் சீட்டு வழங்குதல்




தேர்தல் அதிகாரி வாக்குச் சீட்டை வழங்கி வாக்காளரின் தேர்தல் பிரிவு, வாக்களிப்புத் தொகுதிக்கு உட்பட்ட பிரிவு குறியீடு, வரிசை எண் மற்றும் பெயர் ஆகியவற்றை அழைப்பார்.

## வாக்களித்தல்




வாக்காளர் X-முத்திரையைப் பயன்படுத்தி வாக்குச் சீட்டில் குறியிடுவார்.




வாக்காளர் வாக்குச் சீட்டை மடித்து, வாக்குப் பெட்டிக்குள் போடுவார்.